


தருமபுரி மாவட்டம், தருமபுரி வட்டம், ஜோதி மஹாலில் 71வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா2024, மாவட்ட அளவிலான அரசு விழா நேற்று (17.11.2024) வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் நடைபெற்று. உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கி.சாந்தி , தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி, பென்னாகரம் சட்டமன்ற உறுப்பினர் ஜி.கே.மணி, தருமபுரி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பி.வெங்கடேஸ்வரன், முன்னாள் அமைச்சர் முனைவர் பி.பழனியப்பன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் தடங்கம் பெ.சுப்பிரமணி, மனோகரன், இன்பசேகரன், தருமபுரி நகர்மன்ற தலைவர் திருமதி.மா.லட்சுமி நாட்டான் மாது, மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.ஆர்.கவிதா, கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் கு.த.சரவணன், மத்திய கூட்டுறவு வங்கி மேலாண்மை இயக்குநர் திருமதி.எஸ்.மலர்விழி உட்பட கூட்டுறவாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசுத்துறை அலுவலர்கள் மற்றும் பயனாளிகள் கலந்து கொண்டனர்.




திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நேற்று (17.11.2024) நடைபெற்ற நிகழ்ச்சியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கலந்து கொண்டு மருத்துவ திட்டத்தை சிறப்பாக செயல்படுத்திய ஆரம்ப சுகாதார நிலையங்களின் வட்டார மருத்துவர்களுக்கு பாராட்டு சான்றிதழ் மற்றும் கேடயங்களை வழங்கினார். மாவட்ட ஆட்சித் தலைவர், மருத்துவர் கா.ப.கார்த்திகேயன், ராபர்ட் புருஸ் எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் அப்துல் வஹாப் (பாளையங்கோட்டை), ருபி.ஆர்.மனோகரன் (நான்குநேரி), மாநகராட்சி மேயர் ராமகிருஷ்ணன், மாநகராட்சி ஆணையாளர், மரு.என்.ஓ.சுகபுத்ரா, முன்னாள் பேரவை தலைவர் ஆவுடையப்பன் , அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் முதல்வர் மரு.ரேவதி பாலன், மாவட்ட சுகாதார அலுவலர் மரு.கீதாராணி மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்பட மருத்துவர்கள் செவிலியர்கள், மாணவர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### திருப்பத்தூர் ஒன்றியத்தில்

# வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு சிறப்பு முகாம்! அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு!

## க.தேவராஜ் எம்.எல்.ஏ. – சி.என்.அண்ணாதுரை எம்.பி. – அ.நல்லதம்பி எம்.எல்.ஏ. – அ.செ.வில்வநாதன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

திருப்பத்தூர், நவ. 18- வாக்காளர்கள் பெயர் சேர்த்தல், நீக்கல், திருத்தம் செய்ய மாநிலம் முழுவதும் சிறப்பு முகாம்கள் அனைத்து வாக்குச்சாவடிகளிலும் நடைபெற்று வருகின்றது. கழகத்தின் வாயிலாக அறிவித்த வாக்குச்சாவடி முகவர்கள் இப்பணியில் ஈடுபட்டுவருகின்றனர். திருப்பத்தூர் மாவட்டத்திற்கு பல்வேறு அரசு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள வருகை புரிந்திருந்த பொதுப்பணி நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் எ.வ.வேலு திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதி திருப்பத்தூர் ஒன்றியத்திற்குட்பட்ட திம்மணாமுத்தூர் ஊராட்சியில் அமைந்துள்ள சின்ன பசலிக் குட்டை வாக்குச்சாவடிகள் 151,152 ஆகியவைகளை நேரடியாக சென்று பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை எம்.பி., மாவட்டச் செயலாளர் க.தேவராஜி, A. நல்லதம்பி, அ.செ.வில்வநாதன் மற்றும் தொகுதி பொறுப்பாளர்.ஜி.ரமேஷ் ஆகியோர் உடனிருந்தனர்.

வாக்குச்சாவடியை பார்வையிட்ட பின் ஒன்றிய கழக செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான A. நல்லதம்பி MLAவிடம் சட்டமன்ற தொகுதியில் அனைத்து வாக்குச்சாவடிகளில் கழகத்தின் BLA2,BLC முகவர்களின் செயல்பாடுகள் குறித்து கேட்டறிந்தார். இதில் ஒன்றிய கழக சயலாளர்கள். கே.ஏ.குணசேகரன், க.முருகேசன், கே.எஸ்.ஏ.மோகன்ராஜ், ஒன்றிய சேர்மென்கள் விஜியாஅருணாசலம், திருமதி திருமுருகன் மற்றும் கழக முன்னோடிகள் பங்கேற்றனர்.

### வரவேற்பு : டி.ராமகிருஷ்ணன்! தலைமை: மிசா.பா.மதிவாணன்! மாதவரம் 28வது வட்டத்தில்

# கலைஞர் 101வது பிறந்த நாள் நினைவு கொடிக் கம்பம் - கல்வெட்டு திறப்பு விழா!

## மாதவரம் எஸ்.சுதர்சனம் கொடியேற்றினார்! எஸ்.நந்தகோபால் - ஜி.துக்காராம் - எம்.பிரேம்குமார் - டி.ஆர்.ரவீந்திரகுமார் பங்கேற்பு!

சென்னை, நவ. 18 - மாதவரம் தெற்கு பகுதி 28-வது வட்டத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 116-ஆம் ஆண்டு பிறந்த நாள் விழா மற்றும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 101-ஆம் ஆண்டு பிறந்தநாள் விழா நினைவு கொடிக் கம்பம் - கல்வெட்டு திறப்பு விழா (இரண்டு இடங்களில்) 15.11.2024 வெள்ளிக்கிழமை அன்று காலை 10 மணி அளவில் கொல்கட்டா நகர் - அம்பேத்கர் நகர், டி.எச்.ரோடு, மூலக்கடை ஆகிய இடங்களில் கழக கொடிக் கம்பத்தில் கொடியேற்று விழா நடைபெற்றது.

இவ்விழாவிற்கு சென்னை வடகிழக்கு மாவட்டக் கழக துணைச் செயலாளர் - தியாக தீபம் மா.பொ.வேதா, நினைவு மன்ற செயலாளர் டி.ராமகிருஷ்ணன் வரவேற்புரையாற்றினார்.

மாதவரம் பகுதி உதயநிதி ஸ்டாலின் ரசிகர் நற்பணி மன்றத் தலைவர் டி.ஆர்.ரவீந்திர குமார், டி.ஆர்.செங்குட்டுவன், மா.பொ.வே.ராஜா, எஸ்.சேகர், ஜெயந்தி மதிவாணன், எஸ்.கனிமொழி சுரேஷ் எம்.சி., எஸ்.பார்கவி, ஏ.சுஜாதா, எம்.பி.நடராஜன், ஏ.செல்வம், மதி இளங்கோ, எஸ்.கரண்ராஜ், எஸ்.நிசார் அகமத், எஸ்.ஆரோக்கியராஜ், எஸ். வினோத், இ.ஜோஸ்வா எஸ்.சிவசங்கரன், பி.காசிராஜன், ஜி.கடற்கரையாண்டி, டி.ஆசைத்தம்பி, சி.தயாநிதி, ஏ.அர்ஜுனன், தாவூத், பூக்கடை ரவி, ஜி. அருள், பி.கோபால், எஸ். விக்னேஸ்வரன், ஐ.இளங்கோவன், டி.ராஜேஷ்குமார், என்.சுபாஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தலைமைச் செயற்குழு உறுப்பினர் மிசா பா.மதிவாணன் நிகழ்ச்சிக்கு தலைமை வகித்தார்.

விழாவில் சென்னை வடகிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும் சி.எம்.டி.ஏ. உறுப்பினர் தமிழ் நாடு நூலகப்பிரிவு தலைவருமான மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ. கலந்துகொண்டு கழகக் கொடி ஏற்றி வைத்து சிறப்பித்தார்.

மாதவரம் 3வது மண்டலக் குழு தலைவர் எஸ்.நந்தகோபால் கல்வெட்டினை திறந்து வைத்தார்.

மாதவரம் தெற்கு பகுதி செயலாளர் ஜி.துக்காராம், 28-வது வட்டக் கழக செயலாளர் எம்.பிரேம்குமார் ஆகியோர் இனிப்பு வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில் பகுதி கழக நிர்வாகிகள் புத்தகரம் இ.ஏழுமலை எம்.சி., வி. எஸ்.ஆர்.ஜெயக்குமார், ஏ. விஜயலட்சுமி, இ. மோகன், சி.கே.கோபால், வட்டக் கழக நிர்வாகிகள் எஸ்.எம். பன்னீர்செல்வம் ஏ.சசிகுமார் எஸ்.எம்.மோகன் ஏ.முனுசாமி சி.கே.ஜி.தர்மராஜ் கே.பி.உசேந்திரன் ஏ.ஜெய ச்செல்வி யு.காந்திமதி உதயசூரியன், டி.மதன் டி.ராமன் டி.வேணு கே. எஸ்.ரவி எஸ்.ஆர்.பிரசாத் கே.அசோக் குமார் எஸ். ராஜன் கிச்சா (எ) கிருஷ்ணன்,

ஜி.முனுசாமி ஏ. அன்பரசன் என்.குமார் எம்.மதி ஜெ.நெப்போலியன் சிவமாறன் ஏ.சிக்கந்தர் கலீல் ரகுமான் எம்.மகேந்திரன் டி. ஜெயபால் இ.எக்சோன் எஸ்.ராஜேந்திரன் சக்திவேல் தாமரை முனுசாமி ஏ.சுப்பிரமணி செல்வ ரவி, என்.செழியன் டி.அன்பழகன் மீசை சேகர் என்.சுகுமார் ஏ.முரளி டி.ஆர்.ரவிக்குமார் டி.சி.சுரேஷ் மா. போ.வே.சங்கர் மா. பொ.வே அழகிரி கே. மோகன்

சா. ஏழுமலை டி.ஆனந்தன் எம்.ராஜேஷ் எஸ்.சுரேஷ் கே.மாறன் ஜெ.ககாரின் ஜி.ராஜ்குமார் ஏ.சுதாகர் கே.ரமேஷ் ஆர். சுகுமார் எம்.சுதாகர் கே. மதன் ஜெ.ரவி ஜி.பாபு விக்கிரமாதித்யன் ஏ.சரவணன் எஸ்.எம்.பி.சந்துரு எம்.நாகராஜ் எஸ்.சந்துரு மற்றும் ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி

# மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் பதவிகளுக்கு நேர்காணல்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!



கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் பதவிகளுக்கு விண்ணப்பம் செய்தவர்களுக்கு நேர்காணல், வருகின்ற 21.11.2024 வியாழக்கிழமை, காலை 10.00 மணி அளவில், கடலூர் மாநகர தி.மு.க. அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

கழக மாணவரணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. நேர்காணலை நடத்துகிறார். உடன் கழக மாணவரணி தலைவர் இரா.ராஜீவ் காந்தி, கழக மாணவரணி இணை செயலாளர் எஸ்.மோகன், கழக மாணவரணி துணைச் செயலாளர் எம்.எஸ்.ஆனந்த் கலந்து கொள்கின்றனர்.

ஆகவே மேற்கண்ட பதவிகளுக்கு விண்ணப்பம் செய்தவர்கள் உரிய ஆவணங்களுடன் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் சம்பந்தப்பட்ட மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள் விண்ணப்பம் செய்தவர்கள் கலந்து கொள்வதற்கு உரிய ஏற்பாடு செய்து, தாங்களும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அமைச்சர் **எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்**
செயலாளர், கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.



மாதவரம் தெற்கு பகுதி 28–வது வட்டத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 116–ஆம் ஆண்டு பிறந்த நாள் விழா மற்றும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 101–ஆம் ஆண்டு பிறந்தநாள் விழா நினைவு கொடிக் கம்பம் – கல்வெட்டு திறப்பு விழா (இரண்டு இடங்களில்) 15.11.2024 வெள்ளிக்கிழமையன்று காலை 10 மணி அளவில் கொல்கட்டா நகர் – அம்பேத்கர் நகர், டி.எச்.ரோடு, மூலக்கடை ஆகிய இடங்களில் 60 அடி கழக கொடிக் கம்பத்தில் கொடியேற்று விழா நடைபெற்றது. இதில் சென்னை வடகிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. கலந்துகொண்டு 60 அடி கொடி கம்பத்தில் கழகக் கொடியினை ஏற்றி வைத்தார். நிகழ்ச்சி ஏற்பாட்டினை மாவட்டக் கழக துணைச் செயலாளர் டி.ராமகிருஷ்ணன் செய்திருந்தார். 3–வது மண்டலக் குழுத் தலைவர் கல்வெட்டினை திறந்து வைத்தார். மிசா பா.மதிவாணன் தலைமை வகித்திட ஜி.துக்காராம், எம்.பிரேம்குமார், டி.ஆர்.ரவீந்திரகுமார், டி.ஆர்.செங்குட்டுவன், புத்தகரம் இ.ஏழுமலை எம்.சி., எஸ்.ஆர்.ஜெயக்குமார், மா.பொ.வே.ராஜா, எஸ்.சேகர், ஜெயந்தி மதிவாணன், எஸ்.கனிமொழி சுரேஷ் எம்.சி., எஸ்.பார்கவி, சுஜாதா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.




வ.உ.சிதம்பரனாரின் நினைவு நாளில்
அவரது பன்முகப்பட்ட வாழ்வையும்
பணிகளையும் போற்றுவோம் !

**மு.க.ஸ்டாலின்**
தமிழ்நாடு முதலமைச்சர்

கப்பலோட்டிய தமிழன்
**வ.உ.சிதம்பரனார்** அவர்களின்
**88ஆவது நினைவு நாள்**

**தியாகத் திருநாள்**

தமிழ்நாடு அரசின் சார்பில்
கப்பலோட்டிய தமிழன் **வ.உ.சிதம்பரனார்** அவர்களின்
திருவுருவச் சிலைக்கு

**மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்,**
**மாண்புமிகு மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள்,**
**துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள்,**
சீர்மிகு பெருமக்கள் மலர் தூவி மரியாதை செலுத்துவார்கள்.

**நாள் : 18.11.2024, திங்கட்கிழமை, காலை 10.00 மணி**
**இடம் : காந்தி மண்டப வளாகம், கிண்டி, சென்னை**

**இயக்குநர்**, செய்தி - மக்கள் தொடர்புத்துறை, சென்னை - 600 009.
tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.in.gov.in

செ.ம.தொ.இ./1155/வரைகலை/2024